DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 288/2023 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **ஜெகதீஸ்வரன்** |
| Father's Name | : | **அய்யாவு** |
| Village | : | **வாகுடி** |
| Taluk | : | **மானாமதுரை** |
| Calling | : | **தலைமை காவலர்** |
| Age | : | **37/2025** |

**(வழக்கின் 1ம் எதிரி சிறையில் உள்ளார். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தேனியில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவில் தலைமை காவலராக நான் பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2022 ம் வருடம் சிவகங்கை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தேன். இவ்வழக்கின் எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியும். 26.09.2022 ம் தேதி காலை 6.00 மணிக்கு சிவகங்கை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் மற்றும் முதல் நிலை காவலர் 1365 சிலம்பரசன், காவலர் 2248 முத்துகிருஷ்ணன் ஆகியோர்களுடன் நானும் சட்ட ஒழுங்கு சம்பந்தமாக ரோந்து பணியில் கண்காணித்து வரும் போது காலை 7.00 மணியளவில் சாமியார்பட்டி விளக்கு ரோட்டில் கண்காணித்து வந்து போது சந்தேகத்திற்கு இடமாக Swift Dzire ( TN 11 W 3587 ) என்ற பதிவெண்

கொண்ட கார் வந்தது. நாங்கள் அந்த காரை மறித்து நாங்கள் சோதனை செய்த போது அந்த காரில் சரித்திர பதிவேடு குற்றவாளியான 1 ம் எதிரி சங்கர் ( எ ) சங்கர பாண்டியன் மற்றொரு நபர் ராகேஸ் என்பவரும் வண்டியில் இருந்தார்கள். காரை ராகேஸ் என்பவர் ஓட்டி வந்தார். 1 ம் எதிரி காரை விட்டு இறங்கி சார்பு ஆய்வாளர் ஜெயபாலனை வாளால் வெட்ட வந்தார். அப்போது ஜெயபாலன் விலகிவிட்டதால் அந்த வெட்டு அவர் மீது படவில்லை. அந்த வெட்டு அவர் மீது பட்டிருந்தால் அவர் தலை துண்டாகி இறந்திருப்பார். அதன் பின்பு 1 ம் எதிரி 2 ம் எதிரியிடம் காரை ஏற்றி சார்பு ஆய்வாளரை கொல்லும்படி சொன்னார். அதன் பின்னிட்டு நாங்கள் எதிரிகள் இருவரையும் சுற்றி வளைத்து பிடித்து எதிரிகள் மற்றும் வாளுடன் காலை 8.30 மணிக்கு நிலையம் வந்து உதவி ஆய்வாளர் ஜெயபாலன் எதிரிகள் மீது குற்ற எண் 381/2022 பிரிவு 294 (b) 353, 506 (2 ), 307 இதச மற்றும் 25 ( 1A ) Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

**( வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை )**

-Sd-

**Chief Judicial Magistrate,**

**Sivagangai.**